செ.வெ.எண்:05 நாள்:03.1.2017

# பத்திரிக்கைச் செய்தி

**செய்தித் தாள்களில் உணவுப் பொருட்களை பொட்டலமிடுவது மற்றும் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவிப்பு:**

கரூர் மாவட்டத்தில் உணவுப் பொருட்களை பொட்டலம் இடுவதற்கும், மடித்துத் தரவும், பரிமாறவும் செய்தித் தாள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். செய்தித் தாள்களில் பயன்படுத்தப்படும் மை, உடல் நலனுக்கு ஊறுவிளைவிக்கும். அதில் வண்ணம் உள்ளிட்ட பிற ரசாயனப் பொருட்களின் சேர்க்கை உள்ளது. எண்ணெய் பலகாரங்களை மடித்துத் தருவதால், செய்தித் தாள்களில் உள்ள மையில், காரீயம் போன்ற ரசாயனப் பொருட்கள் உணவுப் பொருட்களில் சேர்ந்து, நுகர்வோருக்கு செரிமான குறைபாடு, முதியவர்கள் மற்றும் சிறியவர்களுக்கு வைட்டல் ஆர்கன் எனப்படும் நுரையீரல், கல்லீரல், இருதயம் போன்றவற்றில் பாதிப்பு ஏற்படுவதுடன், நோய் எதிர்ப்பு கொண்ட செல்கள் அழியவும் காரணமாக உள்ளது. இதனால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்தும் உள்ளது. அதுபோல், மறு சுழற்சி செய்யப்பட்ட அட்டைப்பெட்டிகளை கொண்டு உணவுப் பொருட்களைக் கையாளும்போது பாக்டீரியா தொற்றுகள் ஏற்பட்டு, தொற்று நோய்கள் ஏற்படும் ஆபத்தும் உள்ளது.

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், உணவுப் பொருட்களை பொட்டலம் இடுவதற்கும், மடிப்பதற்கும் எண்ணெய் பலகாரங்களை வைத்து பரிமாறுவதற்கும் செய்தித் தாள்களைப் பயன்படுத்தக் கூடாது என தடை செய்துள்ளது. மேலும், மறுசுழற்சி முறையில் தயாரிக்கப்படும் அட்டைப் பெட்டிகளில் (Recycled Cardboard Boxes) உணவுப் பொருட்கள் கையாள்வதற்கும் தடை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாவட்ட உணவு வணிகர்கள் செய்தித்தாள்களில் உணவுப் பொருட்கள், திண்பண்டங்கள், எண்ணெய் பலகாரங்கள் போன்றவற்றை மடித்து கொடுப்பதாலும் மற்றும் மறு சுழற்சி முறையில் தயாரிக்கப்படும் (Recycled Cardboard Boxes) அட்டைபெட்டிகளை பயன்படுத்துவதாலும் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும் என்பதால், உணவு வணிகர்கள் மற்றும் நுகர்வோர்கள் உணவுப் பொருட்களை கையாள்வதற்கு செய்தித்தாள்களை பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இதனை மீறும் உணவு வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சியர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**